LIBRARY
30 MAR 1963
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 24th March 1961

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eigth of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Eviction of Harijans (Kanyakumari)

*897. *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of Harijans occupying poramboke lands in the Kanyakumari district for more than ten years, who were either evicted from their lands or have been served with notice to vacate the lands they are in occupation?

THE HON. SRI M. A. MANICKAVELU: The information is not readily available with the Government and the Government do not also consider that the time and labour involved in collecting it will be commensurate with its usefulness.

SRI T. S. RAMASWAMI: May I know whether the Government are aware of the fact that many of the Harijans who are already settled for more than ten years on lands in which they have invested their toil, sweat and all the savings have been evicted recently, and if so, whether the Government will go into the matter?

THE HON. SRI M. A. MANICKAVELU: Ordinarily the Government do not evict people from places where they could be accommodated but if it is a very objectionable place like tank-bed or the front of a tank, then only the Government interfere.

SRI P. G. MANICKAM: விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்களை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு உழுதுகொண்டுவரும் ஹரிஜனங்களுக்குக்கு பட்டா வழங்கவேண்டும் என்றுவது ஜில்லா கலெக்டர்களுக்கு சர்க்கார் ஒரு தாக்கீது பிறப்பிக்குமா ?

THE HON. SRI. M. A. MANICKAVELU: பட்டா வழங்கவேண்டுமென்றுதான் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால், 10 ஆண்டு விவசாயம் செய்த காரணத்தினால் மட்டும் பட்டா வழங்கமுடியாது. ஏனென்றால், பட்டா வரி, ஏதுவாய், கால்வாய் புரம்போக்கு இந்த மாதிரி இடங்களில் கொடுத்தால், அந்த ஏரியைச் சேர்ந்த ஆயக்கட்டுதாரர்களை பாதிக்கிறது. அந்த மாதிரி ஆட்சேபணை இல்லை என்றால் பட்டா வழங்கப்படும்.

SRI M K. SOMASUNDARAM: விவசாயத்திற்கு லாயக்கான இடங்களில் 15 வருஷங்களாக பயிர்செய்துகொண்டு வந்தவர்களை இப்பொழுது யாருடைய தூண்டுதலின் பேரிலோ வெளியேற்றுவதற்கு முயற்சி

செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பலவிதமான செலவுகள் ஏற்படு கின்றன. அம்மாதிரி நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருபவர்களை அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றக்கூடாது என்று அரசாங்கம் கலெக்டர் களுக்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதே கேள்விக்குத்தான் நான் முன்பு பதில் சொன்னேன். இம்மாதிரி பட்டா வழங்கவேண்டு மென்பதுதான் கொள்கை. ஆனால், ஆட்சேபணை ஏதாவது இருந்தால், பட்டா வழங்குவதற்கு இல்லை. எவ்வளவு தூரம் இதை தளர்த்த முடியுமோ, அவ்வளவு தூரம் தளர்த்தி ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதகம் இல்லாமல் இருந்தால், பட்டா வழங்கப்பட்டுதான் வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஆட்சேபணை இல்லாத இடங்களில் பல ஆண்டுகளாக நிலத்தில் இருந்துகொண்டு வருகிறார்கள். அதையாவது உடனடியாக பட்டா செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி வந்த வகையில் தான் 3 லட்சம் ஏகர் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMI : பத்து ஆண்டுகளுக்கு மேலாக நிலம் வைத்திருக்கும் ஹரிஜனங்களையாவது அரசாங்கம் கவனிப்பார்களா ? அவர்களாவது வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துவார்களா, கன்யாகுமரி ஜில்லாவில் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ' லிமிடேஷன் லா ' பார்க்கவில்லை. நான் முன்னால் சொன்ன அந்தக் காரணம் தான்.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கேள்வியின் முக்கிய நோக்கம் பட்டா செய்து கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்பதுதான். பட்டா செய்து கொடுப்பதை மேலும் துரிதமாகச் செய்வதற்கு இதர மாவட்டங் களில் ஸ்பெஷல் டெப்யூடி தாசில்தார்கள் போட்டிருக்கிறார்களே ? அம்மாதிரி இந்த மாவட்டத்திலும் போடப்பட்டதா ? அப்படியானால் இது வரையில் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ? இல்லை யென்றால், இந்த மாவட்டத்தில் ஒரு டெப்யூடி தாசில்தாரை போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கே அவசியமோ அங்கெல்லாம் ' ஸ்பெஷல் ஸ்டாப் ' போட்டுதான் வேலை செய்யப்படு கிறது.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : சட்டத்திலுள்ள இதுபோன்ற சிக்கல்களின் காரணத்தினாலே, ஆங்காங்கு உள்ள அரசாங்க நிலங்கள் ஹரிஜன ஏழைகளால் பயிரிடப்படுகிறபொழுது, அதிலிருந்து அரசாங்கத் திற்கு பலன் கிடைக்காமலும், உழைப்பாளிகளுக்கு பலன் கிடைக்காமலும், கிராமாதிகாரிகள் அதில் பணம் பெறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி கனம் அங்கத் தினருக்கு ஏதாவது தெரிந்திருந்தால், அதுபற்றி என்னிடம் தெரி விக்கலாம்.

Lands to Harijans (Kanyakumari)

* 898 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of Government lands given to landless Harijans in the Kanyakumari district for cultivation after the re-organization compared to the area given in the other districts ; and